## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28–ம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிசெல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>சுப்பிரமணியன்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td>முனியாண்டி</td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**28.4.2026 OS.61/2021 பி.வா.சா.1. சுப்பிரமணியன்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

1) இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் சர்வே எண், விஸ்தீரனம், நான்குமால் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது கிராம நிர்வாக அலுவரிடம் கேட்டு பெற்று வர தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றிற்கு யார் தகவல் சொன்னது என்றால் நானும் எனது தம்பியும் சொன்னோம்.

2) நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் தாவா இடமானது ஆதிதிராவிடர் மக்களுக்கு கோவிலுக்காக கொடுக்கப்பட்ட இடம் எனது தெரிவித்துள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் வழக்கில் கண்ட இரு தரப்பினருக்கும் ஆவணங்கள் ஏதும் இல்லை. கிராம கணக்குகளில் தாவா சொத்து ராக்காச்சி அம்மன் கோவில் இடம் என கண்டுள்ளதா என்றால் இல்லை புறம்போக்கு என்று தான் உள்ளது.

3) தாவா இடத்தில் கும்பாபிஷேகம் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் தாவா இடத்தில் கோவில் கட்டப்பட்டுள்ளதா என்றால் தாவா இடத்தில் கோவில் இல்லை சிலையும் சூலாயுதமும் தான் உள்ளது. அது என்ன சிலை என்றால் சூலாயுதம் மொட்டையன் கோவிலைக் குறிக்கும் சிலையானது ராக்கச்சி அம்மன் சிலையாகும். தாவா சொத்தில் நான் சொல்வது போல் சிலையோ சூலாயுதமோ இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 அறிவிப்பில் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் VAO விடம் கேட்டு பெற்றுத்தருகிறேன்.

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.04.28 13:48:46 +0530

4) பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எவ்வித பட்டா மாறுதல் உத்தரவும் ஏற்படவில்லை என்றாலும் நானும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் தாவா வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 நீதிப்பேராணை மனுவில் ஏற்பட்ட உத்தரவானது நான் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் ஏற்படவில்லை என்றால் சரியல்ல அது எங்கள் தரப்பில் சேர்ந்து கொடுக்கப்பட்ட மனுவாகும்.

5) பி.வா.சா.ஆ.3 நீதிப்பேராணை உத்தரவில் மாண்பமை உயர்நீதிமன்றம் சிவகங்கை கோட்டாட்சியர் அவர்களை விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்கத் தான் உத்தரவுவிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.3 உத்தரவானது எங்கள் தரப்பில் கொடுக்கப்பட்ட பி.வா.சா.ஆ.2 மனு தொடர்பாக விசாரணை செய்யச் சொல்லித் தான் கொடுக்கப்பட்ட உத்தரவே தவிர அதில் எவ்வித பட்டாவும் வழங்க கோரி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) தாவா சொத்தானது எந்தக்காலத்திலும் ராக்காச்சி அம்மன் கோவிலாகவோ சூலாயுதம் உள்ள இடமாகவோ அல்லது கோவில் இடமாகவோ இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு ஆதியிலேயே 14.10.1988 ம் தேதியில் இந்த வாதிகளின் தகப்பனார் அனுபவம் செய்து வந்ததன் அடிப்படையில் அரசாங்கத்தால் வா.சா.ஆ.1 பட்டா வழுங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் தான் இந்த நம்பர் 1ம் வாதி தாவா சொத்தில் குடிசை வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் குடியிருந்து வருவதன் அடிப்படையில் தாவா சொத்தில் கண்ட வீட்டிற்கு வரி ஏற்பட்டு வா.சா.ஆ.3 மூலம் வரி செலுத்தி வந்துள்ளார் என்றால் சரியல்ல.

7) மேற்படி தாவா சொத்தில் கட்டியுள்ள குடிசை வீட்டை 1ம் வாதி இடித்துவிட்டு புதிய கட்டுமானம் கட்டுவதற்கு இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் 1ம் வாதியால் பெறப்பட்ட உத்தரவு வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி விவரங்கள் நன்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8) தாவா சொத்து இந்த நம்பர் வாதிகளின் தகப்பனாருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்ற அடிப்படையில் வாதிகளின் தகப்பனார் காலத்திற்கு பின்னர் வாரிசு அடிப்படையில் இந்த வாதிகள் அனுபவம் செய்து

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.28 13:48:54 +0530

வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பூர்வீக பாத்தியத்தின் அடிப்படையில் தான் வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்து வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் கண்ட வீட்டிற்கு வாதிகள் செலுத்திய மின்கட்டண ரசீதுகள் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் வா.சா.ஆ.4 ஆவணத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

9) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்துமே வாதிகளுக்கு தனித்த பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்பதை காட்டக்கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து நான் சொல்வது போல் கோவிலுக்கு பாத்தியப்பட்ட பொது சொத்து அல்ல என்றால் சரியல்ல. வாதிகளின் அமைதியான அனுபவத்தை நானும் எனது சகோதரரும் தடைசெய்ய எத்தனித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது என்றாலும் நாங்கள் வாதிகளின் அனுபவத்தை தடை செய்ய எவ்வித உரிமையும் எங்களுக்கு கிடையாது என்றாலும் சரியல்ல.

10) தாவா சொத்தில் உள்ள வீட்டை இந்த வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(**மறுவிசாரணை இல்லை**).

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.28 13:49:01 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam